பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 23 திங்கட்கிழமை 07.03.2022 கதிர் 348

யாழில் டெங்கு காய்ச்சலால்

## ஒன்றரை வயது குழந்தை சாவு!

யாழ்ப்பாணத்தில் டெங்கு காய்ச்சல் காரணமாக ஒன்றரை வயது குழந்தை உயிரிழந்துள்ளது.

கொடிகாமம், மீசாலை வடக்கைச் சேர்ந்த வாகீசன் விதுசன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. ☞2

# இந்த ஆட்சிக்கு எதிராக மக்களே கிளர்ந்தெழுக!

## ஹட்டன் போராட்டத்தில் சுமந்திரன் அறைகூவல்

**நாட்டை வளப்படுத்துவோம், பாதுகாப்போம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளியுள்ளனர். எனவே, இந்த ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்.**

**- இவ்வாறு அறைகூவல் விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.** ☞2



## விபத்தில் இளைஞர் மரணம்!

கிளிநொச்சி, இரணைமடு அம்பாள்நகர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இரணைமடுப் பகுதியிலிருந்துஏ-9 வீதிநோக்கிப் பயணித்த ஐஸ்கிறீம் விற்பனை வாகனத்துடன் எதிரே பயணித்த மோட்டார் சைக்கிள் ☞2

## சஜித்திடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு உடனே பதவி விலக வேண்டும் அரசு

### திகாம்பரம் எம்.பி. வலியுறுத்து



இந்த அரசால் நாட்டை நிர்வகிக்க முடியவில்லை. தன்னால் முடியாது என்பதை ஆளுங்கட்சியினர் மீண்டும், மீண்டும் உறுதிப்படுத்தி வருகின்றனர். எனவே, ஆளக்கூடிய தலைவரான சஜித்திடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு இந்த அரசு உடன் பதவி விலக வேண்டும்.

- இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற ☞2

## அரசை விரட்டியடிக்க நாட்டு மக்கள் தயார்!

### இராதா எம்.பி. தெரிவிப்பு



இந்த நாட்டிலே எதை எடுத்தாலும் 'இல்லை' என்றதொரு நிலைமையே உருவாகியுள்ளது. இதற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும். இப்படியானதொரு நிலைமை உருவாக்கிய அரசை வீட்டுக்கு அனுப்ப நாட்டு மக்கள் தயாராகிவிட்டனர்.

- இவ்வாறு ☞2

## கோட்டாபயவை நாளை சந்திக்கிறார் மைத்திரி

### சு.கவின் சிரேஷ்ட உறுப்பினர்களும் பங்கேற்பு

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு ☞2



## நீதி வெல்லும்!

### உண்மை சாகாது என்கிறார் விமல்

நான் அமைச்சரவையிலிருந்து நீதிக்காகவே குரல் கொடுத்தேன். நாட்டின் நலன் கருதி உண்மைகளைப் பகிரங்கமாக உரைத்தபடியால் எனது அமைச்சுப் பதவியை ஜனாதிபதி பறித்துள்ளார். ☞2

## புலிகளுடன் நேருக்குநேர் போரிட்டேன் எனக் கூறும் கோட்டாபய எம்மைச் சந்திக்கத் தயங்குவது ஏன்?

### கேள்வியெழுப்புகின்றார் ஹிருணிகா



தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேருக்கு நேர் போரிட்டவர் எனக்கூறிக்கொள்ளும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எம்மைச் சந்திக்கத் தயங்குவது ஏன்?

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணியின் ☞2

## டீசல் தியனவாத? பெற்றோல் தியனவாத? கிரிபிடி தியனவாத?

### பிரதமர் மஹிந்தவின் பாணியில் அரசுக்குச் சாணக்கியன் பதிலடி!



டீசல் தியனவாத (டீசல் இருக்கின்றதா)? பெற்றோல் தியனவாத (பெற்றொல் இருக்கின்றதா)? கிரிபிடி தியனவாத (பால்மா இருக்கின்றதா)? தெங்க செபத (இப்போ சுகமா)?

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாணியிலேயே கேள்விக்கணைகளைத் தொடுத்து, அரசுக்குப் பதிலடி கொடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன். ☞2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## புலிகளுடன் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாட்டாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர கூறியதாவது:-

அரசுக்கு எதிரான எமது போராட்டத்தின்போது ஜனாதிபதி செயலகம் செல்லாமல், ஜனாதிபதி வசிக்கும் வீடு ஏன் சுற்றிவளைக்கப்பட்டது எனக் கேட்கின்றனர். ஜனாதிபதி செயலகம் சென்றால் நடக்கப்போவது எதுவும் இல்லை. ஜனாதிபதிக்குப் பிரச்சினை தெரியவரப்போவதும் இல்லை. மனுக்கள் கொடுத்தாலும் அவை குப்பைத் தொட்டியில் வீசப்படும்.

எனவே, ஜனாதிபதி வசிக்கும் வீடு முன்னால் சென்றால் குறைந்தபட்சம் எமது குரலாவது கேட்டும் பிரச்சினை தெரியவரும். ஜனாதிபதிக்குப் புரியாவிட் டால்கூட பெண்ணான ஜனாதிபதியின் பாரியாருக்காவது, மகளிர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தெரியவரும்.

ஆனால், நாம் அங்கு சென்றவேளை ஜனாதிபதியும், பாரியாரும் அநுராதபுரம் சென்றுள்ளனர். பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் நாட்டுப் பிரச்சினையைச் சொல்வதற்குச் சென்ற வேளை, ஜனாதிபதி ஜோதிடம் பார்க்க அநுராதபுரம் சென்றுள்ளார்.

அரச சொத்துகளுக்குச் சேதம் விளைவிக்கவோ அல்லது ஜனாதிபதியுடன் தனிப்பட்ட ரீதியில் முரண்படவோ நாம் செல்லவில்லை. பேச்சு நடத்தவே அங்கு சென்றோம்.

ஜனாதிபதியாக இருந்தவர் இராணுவத்தில் இருந்தவர். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேருக்கு நேர் போரிட்டவர் எனக் கூறிக்கொள்பவர். அப்படியான ஒருவர் எம்மைச் சந்திக்கத் தயங்குவது ஏன்?

அத்துடன், நாட்டுப் பிரச்சினையை எடுத்துரைக்கச் சென்ற எம்மைக் கைது செய்வதற்கு முற்படுகின்றனர் -என்றார்.

## டீசல் தியனவாத? ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, நீண்ட நேர மின்வெட்டு, பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் ஹட்டனில் நேற்று (06) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கேள்விகளை எழுப்பி, அரசுக்குப் பதிலடி கொடுத்தார் சாணக்கியன்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற எமது போராட்டத்துக்கு மலையக மக்களின் ஆதரவும் இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டவே இங்கு வந்துள்ளோம். நீங்கள் அனைவரும் அணிதிரண்டு ஆதரவை வழங்கியுள்ளீர்கள். அதற்காக நன்றிகள்.

மலையகப் பெருந்தோட்ட மக்கள் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் பொருளாதாரத்தை அவர்கள் தோளில் சுமக்கின்றனர். ஆனால், அவர்களின் பிள்ளைகளுக்குக் குடிப்பதற்குப் பால்மா இல்லை.

ஓரிரு இடங்களிலேயே ஆயிரம் ரூபா நாட் சம்பளம் வழங்கப்படுகின்றது. தற்போதைய சூழ்நிலையில் அது போதுமானதாக இல்லை. 2 ஆயிரம் ரூபா நாட் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

இந்த அரசு தோல்வியடைந்துவிட்டது. செல்வாக்கையும் இழந்து வருகின்றது. இந்த அரசைத் தமிழ் மக்கள் அனுப்ப வேண்டியதில்லை, அரசுக்கு வாக்களித்தவர்களே வீட்டுக்கு அனுப்பிவைப்பார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ எதிரணியில் இருக்கும்போது சில கேள்விகளைக் கேட்பார். அதனை நான் இங்கு கேட்க விரும்புகின்றேன்.

டீசல் தியனவாத (டீசல் இருக்கின்றதா)?, பெற்றோல் தியனவாத (பெற்றோல் இருக்கின்றதா)?, கிரிபிடி தியனவாத (பால்மா இருக்கின்றதா)? தெங்க செபத (இப்போ சுகமா)? - என்றார்.

## நீதி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், நீதி வெல்லும்; உண்மை ஒருபோதும் சாகாது.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

நேற்று மாலை தனது வீட்டில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் உள்ளிட்ட எனது கட்சியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் எதிரணிப் பக்கம் அமரமாட்டோம். அரச பக்கம் இருந்தே சுயாதீனமாகச் செயற்படுவோம். எனக்கு நடந்த அநீதிக்கு நீதி கிடைத்தே தீரும்.

எனது அமைச்சுப் பதவி பறிபோக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே முழுக் காரணம். அதற்கான விளைவுகளை அரசியல் ரீதியில் அவர் விரைவில் சந்தித்தே தீருவார்.

நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்துக்குள் சென்றமைக்கும் பஸில் ராஜபக்ஷ பதில் சொல்லியே ஆகவேண்டும் - என்றார்.

## கோட்டாபயவை நாளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை மாலை 4 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சரவையில் இருந்து ஜனாதிபதி வெளியேற்றியுள்ளார். எனினும், பங்காளிக் கட்சிகளின் மாநாட்டில் பங்கேற்ற சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி தெளிவுபடுத்தும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறக்கூடும் எனத் தெரியவருகின்றது.

இதன்போது தமது தரப்பு கோரிக்கைகளையும் சுதந்திரக் கட்சி முன்வைக்கும் எனவும் அறியமுடிகின்றது.

## அரசை விரட்டியடிக்க .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாட்டில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, நீண்டநேர மின்வெட்டு, பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் ஹட்டனில் நேற்று (06) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பெற்றோல் இல்லை. டீசலும் இல்லை. மின்சாரமும் இல்லை. இவை இல்லாததால் தொழிற்சாலைகள் இயங்கவில்லை. அதனால் முதலீட்டாளர்களுக்கு வருமானம் இல்லை. ஊழியர்களுக்குச் சம்பளமும் இல்லை. அரிசி வாங்கக் காசு இல்லை. குடிப்பதற்குப் பால்மாவும் இல்லை. நாட்டில் எதற்கெடுத்தாலும் இவ்வாறு 'இல்லை' என்றதொரு நிலைமையே உருவாகியுள்ளது.

அனைத்து வழிகளிலும் இந்த அரசு நாட்டு மக்களை வதைத்துக்கொண்டிருக்கின்றது. எனவே, இந்த அரசு பெரும் சாபக்கேடாகும். இந்த அரசை விரட்டியடிக்க மக்கள் தயாராகிவிட்டனர். நாமும் அதற்குப் பேராதரவை வழங்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நிச்சயம் நாம் நாட்டையும், மக்களையும் காப்போம். அதற்கான தேசிய வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது - என்றார்.

## சஜித்திடம் நாட்டை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான பழனி திகாம்பரம் வலியுறுத்தினார்.

நாட்டில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, நீண்டநேர மின்வெட்டு, பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் ஹட்டனில் நேற்று (06) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் என்ன நடக்கின்றது என்பது பெரும் புதிராகவே இருக்கின்றது. ஆட்சியாளர்களின் முறையற்ற முகாமைத்துவத்தால் எதிலும் நிலையற்ற தன்மையே காணப்படுகின்றது.

இரவில் நித்திரைக்குச் சென்று, காலையில் கண்விழித்தால் ஏதேனும் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. கட்டுப்பாட்டு விலையும் இல்லை. இதனால் வியாபாரிகள் தங்களுக்குத் தேவையான விலையில் விற்பனை செய்து வருகின்றனர். இதனால் மக்களுக்கே பெரும் பாதிப்பு.

அதுமட்டுமல்ல புதிய புதிய வரிசைகளும் உருவாகி வருகின்றன. சமையல் எரிவாயுவுக்கு வரிசை, பால்மாவுக்கு வரிசை, சீனிக்கு வரிசை, தற்போது டீசல், பெற்றோலுக்கு வரிசை எனப் பல வரிசைகள் உருவாகியுள்ளன. இந்த ஆட்சி தொடர்ந்தால் மேலும் பல வரிசைகளும் உருவாகும் அபாயம் உள்ளது.

ஆட்சியாளர்களிடம் ஆளும் திறமை இல்லை. இனவாதம் பேசியே ஆட்சிக்கு வந்தனர். இவர்களுக்கு இறைவன் தக்க தண்டனை வழங்கியுள்ளார்.

தங்களால் முடியாது எனத் தெரிந்தும், அதிகார ஆசையில் தொடர்ந்தும் ஆள இவைகள் முற்படுகின்றனர். முடியாவிட்டால் வீடு செல்லுமாறு இவர்களை நாம் வலியுறுத்துகின்றோம்.

இந்த நாட்டைச் சிறப்பாக ஆளக்கூடிய தலைவரான சஜித் பிரேமதாஸ இருக்கின்றார். அவருக்கு பக்கபலமாக நாம் இருக்கின்றோம். எனவே, நாட்டு மக்களின் நலன் கருதி அரசு பதவி விலக வேண்டும் என்றார்.

## விபத்தில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, திருவையாறு பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் சஞ்ஜீவன் எனும் 29 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இவர் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிபவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரிணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இந்த ஆட்சிக்கு எதிராக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, நீண்டநேர மின்வெட்டு, பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் ஹட்டனில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

இதன்போது சுமந்திரன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

இந்த எதிர்ப்புப் போராட்டத்திலும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக நடைபெறும் கையெழுத்துப் போராட்டத்திலும் பங்கேற்பதற்காகவே நாம் மலையகம் வந்துள்ளோம்.

நாட்டில் எவரும் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எந்தப் பொருளை வாங்கச் சென்றாலும் 'இல்லை' என்ற பதிலே வழங்கப்படுகின்றது. அப்படியே பொருள்கள் இருந்தாலும் அவற்றின் விலை அதிகம். அத்தியாவசியப் பொருட்களின் விலைகள்கூட எகிறியுள்ளன. நாட்டிலே பிரயாணம் செய்ய முடியவில்லை. வீட்டிலே சமைக்க முடியவில்லை.

நாட்டை வளப்படுத்துவோம், பாதுகாப்போம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இரு வருடங்களுக்குள்ளேயே நாட்டை அதளபாதாளத்துக்குள் தள்ளிவிட்டனர். நாட்டு மக்களும் விழுந்துள்ளனர்.

இப்படியான ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் இருக்கக்கூடாது. மக்கள் கிளர்ந்தெழ வேண்டும். மக்களை ஒடுக்குவதற்கு ஆட்சியாளர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவார்கள். அதனால்தான் இப்படியான பயங்கரச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்துகின்றோம் - என்றார்.

## ஒன்றரை வயது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 6 நாள்களாகக் காய்ச்சல் காரணமாக குழந்தைக்கு ஆயுர்வேத வைத்தியம் செய்த பின்னர் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5 மணிக்கு சாவச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.

இதையடுத்து மேலதிக சிகிச்சைக்கு குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

எனினும், குழந்தை சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

டெங்கு காய்ச்சல் காரணமாகவே குழந்தையின் இறப்பு இடம்பெற்றது என மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் இறப்பு விசாரணையை நேற்று மேற்கொண்டார்.

இதேவேளை, காய்ச்சலால் பாதிக்கப்பட்டால் அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இதுதான் ஆசியாவின் அதிசயமோ?

பொருளாதாரம் மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் இப்போதைய சூழலில் இவ்விடயத்தை ஒட்டிய சர்ச்சைக்குரிய பதவியாக நோக்கப்படுவது இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பொறுப்பாகும்.

இந்தப் பதவியை வகிக்கும் அஜித் நிவார்ட் கப்ரால் தமக்கு ஒரு விடயம் ஆச்சரியமாக இருக்கின்றது என்று கூறுவதைக் கேட்கும்போது அதை செவிமடுக்கும் மக்களுக்கு ஆச்சரியம் ஏற்படுவதைச் சுட்டிக்காட்டித்தானாக வேண்டும்.

பெப்ரவரி மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 15.1 வீதத்தை எட்டியுள்ளது. இது தமக்கு ஆச்சரியத்தைத் தருவதாக மத்திய வங்கி ஆளுநர் கூறுகின்றமைதான் மக்களுக்கு வியப்புக்குரியதாக இருக்கின்றது.

''பணவீக்கம் இவ்வளவு தூரம் அதிகரித்திருப்பது எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. வழமையான பண்புகளுக்கு மாறாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 13 ஆண்டுகளாக ஒற்றை இலக்கத்தில் கட்டுப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்த பணவீக்கம் அந்தக் கட்டுப்பாட்டைத் தகர்த்து இரட்டை இலக்க வீதத்துக்கு மாறி, அதையும் தாண்டி வேகமாக உயர்வது பெரும் அதிகரிப்பாகும். இதை நாம் அனுமதிக்க முடியாது. எங்கள் பொருளாதாரத்தின் முக்கிய விடயமாக இந்தப் பணவீக்கத்தைப் பார்க்கின்றோம். மீண்டும் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டு வருவதற்கு கடுமையான நடவடிக்கைகளை மத்திய வங்கி எடுக்கும்." – இப்படி மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்திருக்கின்றார்.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – இத்தகைய பணவீக்க அதிகரிப்பு, தங்களுக்கு ஆச்சரியத்தைத் தருவதாக இருக்கின்றது என அவர் கூறுவது.

அடுத்தது – பணவீக்கத்தை மீளவும் ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டு வரும் நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார்கள் என அவர் குறிப்பிடுவது.

இந்தப் பணவீக்க உயர்வு அவருக்கு மட்டுமல்ல, நாட்டில் எவருக்கும் ஆச்சரியம் தந்த விடயமல்ல. எல்லோரும் எதிர்வு கூறிய விடயம்தான்.

அரசின் கடப்பாடுகளை நிறைவு செய்ய வழியின்றி பண நோட்டுக்களைக் கண்மண் தெரியாமல் அச்சிட்டுப் புழக்கத்தில் விட்டமை, வெளிநாட்டுக் கடன்களுக்கான தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக நாட்டின் முழு வருமானத்தையும் துடைத்துக் கொடுத்தமை, ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதியை செயற்கைத்தனமாக இழுத்துப்பிடித்து வைத்தமை, கண்மண் தெரியாமல் எகிறும் விலைவாசி போன்றவற்றைக் கணக்கெடும் எவருக்குமே பணவீக்கம் இப்படித்தான் உயரும் என்பது உறுதியாகத் தெரியும்.

ஆளுநர் கப்ராலின் மத்திய வங்கியின் நிதிக் கொள்கை, அரசின் பொருளாதார அணுகுமுறை நடவடிக்கைகள் போன்றவற்றை மதிப்பீடு செய்யும் எவருக்குமே நிலைமை இப்படித்தானிருக்கும் என்பது வெளிப்படையாகவே தெரியும். பணவீக்க உயர்வு தமக்கு ஆச்சரியத்தைத் தருவதாக ஆளுநர் கூறுவது வெறும் பம்மாத்து. இதுதான் அவரும் அவரது அரசும் குறிப்பிட்ட ஆசியாவின் அதிசயமோ அல்லது ஆசியாவின் ஆச்சரியமோ தெரியாது.

பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு மீளக் கொண்டு வருவதற்கான கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம் என மத்திய வங்கி ஆளுநர் கூறுவதும் கற்பனாவாத பித்தலாட்டக்கதைதான். இந்த ஆட்சியில் – அதன் பொருளாதாரக் கொள்கைப் போக்கில் – இப்போதுள்ள மோசமான பொருளாதார நிலைமையில் – அது மாத்திரமல்ல, அதுவும் சர்வதேச சந்தையில் அறுபது எழுபது டொலரில் இருந்த ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 130 டொலர் வரை அதிகரித்துள்ள நிலையில் – நாட்டின் பணவீக்கத்தை மீண்டும் ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டு வருவோம் என்ற மத்திய வங்கி ஆளுநரின் கூற்று வெறும் பகல்கனவுதான்.

# தொடர்ந்தும் அமைதியாக நாம் இருக்கப்போவதில்லை

## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்த முடியாவிட்டால், அரசு பதவி விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரி விக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிப் பொதுமக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் இரண்டு வருடங்களில் நாடு சீர்குலைந்துள்ளது என அவர் குற்றம் சாட்டினார். பொருள்களை வாங்குவதற்காக நாடு முழுவதும் மக்கள் வரிசையில் நிற்கின்றமை, அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்பதைக் காட்டுகின்றது எனக் கூறினார்.

இதேவேளை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நோக்கில் எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் நாட்டைப் பாதுகாக்கும் தேசிய நிகழ்வாக அமையும் என பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பிலான கைக்குண்டுகள் முள்ளிவாய்க்காலில் மீட்பு!

முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் விடுதலைப்புலிகளின் தயாரிப்பான தமிழன் கைக்குண்டுகள் 220 மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 02.03.2022 அன்று முள்ளிவாய்க்கால் கிழக்கு சனசமூக மண்டபத்துக்கு அருகில் காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்த போது நிலத்தில் புதைக்கப்பட்ட வெடிபொருள்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸாரின் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய கடந்த 04.03.2022 அன்று வெடிபொருள் செயலிழக்கும் சிறப்பு அதிரடிப்படையினரால் குறித்த பகுதி தோண்டப்பட்டுள்ளது.

இதன்போது விடுதலைப்புலிகளின் தயாரிப்பான தமிழன் கைக்குண்டுகள் 220 மீட்கப்பட்டுள்ளன. இவற்றை அழிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது.



# மதுபோதையில் முதியவரை மோதித்தள்ளிய பொலிஸார்!

## தப்பியோட முயன்று மக்களிடம் சிக்கினர்

கிளிநொச்சி பரந்தன் ஏ-35 வீதியில் சைக்கிளில் பயணித்த முதியவர் ஒருவரை, சிவில் உடையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் அதிகாரிகள் மோதித் தள்ளியுள்ளனர்.

இதன்போது காயமடைந்த முதியவரை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு தப்பியோட முயன்ற நிலையில், பொதுமக்களால் அவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம், பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு 07.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸாரிடம், விபத்தை ஏற்படுத்தி தப்பிச் செல்ல முற்பட்டவர்கள் பொலிஸ் அதிகாரிகள் என்று அங்கிருந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அவர்கள் மதுபோதையில் இருந்த நிலையில் மேற்படி விபத்தை மூடி மறைக்க முற்பட்டனர் எனப் பிரதேச மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, காயமடைந்த முதியவர் 1990 அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டார்.

# எதிர்வரும் 3 மாதங்களுக்குள் உயர்தரப் பெறுபேறு வருமாம்!

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் எல்.எம்.டீ.தர்மசேன தெரிவித்தார். மேலும் உயர்தரப் பரீட்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார். பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் விடைத்தாள்களை கொண்டு செல்லும்போது எரிபொருள் இன்மையால் சில நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது எனக் கூறினார்.

இருப்பினும், பொலிஸாரின் உதவியுடன் அதனை முகாமைத்துவம் செய்ய முடிந்தது என பரீட்சைகள் ஆணையாளர் எல்.எம்.டீ.தர்மசேன தெரிவித்தார்.

இதேவேளை, விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக எதிர்வரும் 12 ஆம் திகதி வரை 7 பாடசாலைகள் (கொழும்பு றோயல், கேகாலை வித்தியாலயம், கண்டி - கிங்ஸ்வூட், கண்டி - சீதாதேவி, காலி வித்தியாலோக, பதுளை ஊவா மகா வித்தியாலயம், இரத்தினபுரி பெண்கள் கல்லூரி) மாத்திரம் மூடப்பட்டிருக்கும் என்றும் அவர் கூறினார்.

# முதல்முறையாக பொதுவெளியில் முகம் காட்டிய தலிபானின் ரகசிய தலைவர்



மோஸ்ட் வாண்டட் தீவிரவாதி, ஹக்கானி நெட்வொர்க்கின் தலைவராக அறியப்படும் சிராஜுதீன் ஹக்கானி பொதுவெளியில் முதல்முறையாக தனது முகத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் போலீஸ் பட்டமளிப்பு விழா மூலமாக பொதுநிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு முதன்முதலில் தனது முகத்தை வெளிப்படுத்தியுள்ளார் சிராஜுதீன் ஹக்கானி. தலிபானின் மிகவும் ரகசியமான தலைவர்களில் ஒருவராகவும், அமெரிக்காவின் மோஸ்ட் வாண்டட் பட்டியலில் உள்ள சிராஜுதீன் ஹக்கானி, ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசில் உள்துறை அமைச்சராகவும் உள்ளார். போலீஸ் பட்டமளிப்பு நிகழ்வில், உங்கள் திருப்திக்காகவும், உங்கள் நம்பிக்கையை வளர்ப்பதற்காகவும்& நான் ஊடகங்களில் தோன்றுகிறேன் என்று சிராஜுதீன் ஹக்கானி பேசியுள்ளார். இதையடுத்து, ஹக்கானியின் படங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது.

தலிபான் அமைப்பின் துணை அமைப்பாக கருதப்படுவது ஹக்கானி நெட்வொர்க். இதனை நிறுவியவர் ஜலாலுதீன் ஹக்கானி. சோவியத் ஆக்கிரமிப்பிற்கு எதிரான முஜாஹிதீன் போரின் போது முஜாஹிதீன் தளபதியாக இருந்தவர்தான் ஜலாலுதீன் ஹக்கானி. இவரின் மகனே இந்த சிராஜுதீன் ஹக்கானி. இவரே தற்போது ஹக்கானி நெட்வொர்க்கை வழிநடத்தி வருகிறார். ஹக்கானி நெட்வொர்க் என்பது பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லையில் தலிபான்களின் நிதி மற்றும் ராணுவ சொத்துக்களை மேற்பார்வையிடும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவாக அறியப்படுகிறது. ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் செயல்பட்டுவரும் ஹக்கானி தீவிரவாத குழுவினர், ஆப்கானிஸ்தானில் பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தற்கொலைப் படைத் தாக்குதலை அறிமுகப்படுத்தியதே இந்த ஹக்கானி நெட்வொர்க்கே. பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தானை தளமாகக் கொண்டு செயல்பட்டு வரும் அல் கொய்தா அமைப்புடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்ட பரந்த இஸ்லாமிய பயங்கரவாத மாஃபியாவாக அறியப்படும் இந்த நெட்வொர்க்கை அமெரிக்கா 2012ஆம் ஆண்டு தீவிரவாத அமைப்பாக அறிவித்தது. 2018இல் ஜலாலுதீன் ஹக்கானி இறந்த பிறகு ஹக்கானி நெட்வொர்க்கின் தலைவராக பொறுப்பேற்றார் சிராஜுதீன். ஆனால் அதற்கு முன்னதாகவே பல்வேறு தாக்குதல்களை அரங்கேற்றி உலகளவில் தேடப்படும் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டார்.

2008ஆம் ஆண்டு காபூலில் உள்ள இந்திய தூதரகத்தின் மீது நடந்த தாக்குதலில் 58 பேர் உயிரிழந்தனர். அதேபோல், 2009 - 10இல் இந்தியாவை குறிவைத்து ஹக்கானி நெட்வொர்க் தாக்குதல் நடத்தியது. 2008இல் காபூல் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற தாக்குதலில் அமெரிக்கர் ஒருவர் உள்ளிட்ட 6 நபர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அதே ஆண்டில் அன்றைய ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீது கர்சாயை கொலை செய்ய முயற்சி நடந்தது.

மேலும், ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மற்றும் கூட்டணிப் படைகளுக்கு எதிராக எல்லை தாண்டிய தாக்குதல்கள் அடிக்கடி ஹக்கானி நெட்வொர்க்கால் அடிக்கடி நடத்தப்பட்டன. இவை அனைத்தையும் செய்ய மூளையாக இருந்தவர் சிராஜுதீன் ஹக்கானி என்று சொல்லப்படுகிறது. இதனால், அமெரிக்காவின் ய்யணூா இவரை 'ஒரு உலக பயங்கரவாதி' என்று அறிவித்தது இவரின் தலைக்கு 10 மில்லியன் அமெரிக்க டாலர்களை சன்மானமாக அறிவித்தது.

ஆனால், அவரை கைது செய்ய முடியவில்லை. மேலும், 40 - 50 வயதுக்குள் இருப்பதாக நம்பப்படும் சிராஜுதீன் இருக்கும் இடமும் இதுவரை அறியப்படாமல் இருந்தது. அதுமட்டுமில்லாமல், அவரின் ஒருபுகைப்படம்கூடயாரிடமும்இல்லை. இதனிடையே, தான்தலிபான்கள்ஆப்கானிஸ்தானைகைப்பற்றியதும் சிராஜுதீன் அந்நாட்டு உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றார். இதன்பின்பும் அவர் பொதுவெளியில் தோன்றுவதை தவிர்த்துவந்தார். தலிபான்களும் அவரின் படத்தை வெளியிடவில்லை.

இந்த நிலையில் தான் நேற்று ஆப்கானிஸ் தானில் நடந்த போலீஸ் பயிற்சியில் தேர்வான வர்களுக்கு பட்டமளிக்கும் விழா மூலமாக முதல்முறையாக பொதுவெளியில் தனது முகத்தை காட்டி யுள்ளார். கடந்த 20 ஆண்டுகளில் நடந்த மிக மோச மான வன்முறைகளுக்கு காரணமாக குற்றம் சாட்டப்படும் சிராஜுதீன் ஹக்கானியின் படங்கள் மற் றும் வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகிறது.

முன்னதாக, காபூலில் நடந்த போலீஸ் பட்டமளிப்பு விழாவில் பட்டதாரிகளிடம் பேசிய பிறகு சிராஜுதீன் ஹக்கானி நிகழ்விலிருந்து வெளியேறுகிறார். ஹக்கானி கடந்து செல்லும்போது, ஆப்கானிஸ்தானுக்கான பாகிஸ்தான் தூதர் மன்சூர் அஹ்மத் கான், தனது இருக்கையில் இருந்து எழுந்து நின்று மரியாதை செலுத்தினார். இந்தக் காட்சிகளும் தற்போது வைரலாகி வருகிறது.

## உக்ரைன் அதன் அந்தஸ்தை இழக்க நேரிடலாம்: புடின் எச்சரிக்கை



தற்காலிக போர் நிறுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் உக்ரைன் நகரங்கள் மீது ரஷ்யா கடுமையான தாக்குதல்களை 11 ஆவது நாளாக முன்னெடுத்துள்ளது.

பொதுமக்கள் நகரங்களில் அதிகமாக இருப்பதால் ரஷ்யாவின் முன்னகர்வு எதிர்பார்த்ததை விட தாமதமாகவே நகர்கின்றது. உக்ரைனின் துறைமுக நகரான மரியுபோலிலும் ரஷ்ய படைகள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருகின்றன.

இப்போரில் உக்ரைன் 1.5 மில்லியன் மக்கள் ஐரோப்பிய எல்லை நாடுகளுக்குள் தஞ்சம் அடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

போரில் 11,000 ரஷ்யப் படையினர் உயிரிழந்துள்ளதாக உக்ரைன் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களை ரஷ்யப் படையினர் குறிவைக்கவில்லை என்றும் ஆனால் தண்ணீர் இன்றியும், உணவின்றியும் ஏராளமானோர் தவித்துவரும் நிலையில், மக்களை வெளியேற விடாமல் உக்ரைன் படையினர் தடுப்பதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. உக்ரைன் படையினர் பொதுமக்களை மனிதக் கேடங்களாகப் பயன்படுத்துவதாக ரஷ்யா தெரிவிக்கிறது.

இப்போரில் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளால் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் பொருளாதாரமும் பாதிப்படைந்துள்ளது.

நேற்று ரஷ்யாவில் பயன்படுத்தப்படும் அமெரிக்க விசா, மாஸ்டர் வங்கி அட்டைகள் சேவைகளை நிறுத்தியுள்ளன.

இதேநேரம் ரஷ்ய அதிகாரிகளின் தற்போதைய நடவடிக்கைகள் தொடர்ந்தால் உக்ரைன் என்ற நாடு நாடாகத் தொடர்வதில் சிக்கல் ஏற்படும் என ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளைக் குறி வைத்தே ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகின்றது எனக் கூறியுள்ள இங்கிலாந்து, செச்செனியா, சிரியாவில் கையாண்ட போர் தந்திரங்களை உக்ரைனிலும் ரஷ்யா கையாள்வதாக தெரிவித்துள்ளது.

மக்கள் அதிகம் வசிக்கும் கிவ், சேர்னிகிவ், கார்கீவ் போன்ற நகரங்களை தான் ரஷ்யா குறிவைத்து தாக்குகிறது என இங்கிலாந்து உளவுத்துறை தெரிவித்துள்ளது.

## கீவ் மீது முழுவீச்சில் ரஷ்யா தாக்குதல் நடத்துவதாக உக்ரைன் தகவல்



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்கி 12ஆவது நாளாகவும் தாக்குதல் நீடித்து வருகின்ற நிலையில், தலைநகர் கீவ் மீது முழுவீச்சில் தாக்குதல் நடத்த தயாராகி வருவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படைகள் கீயவ் நகரத்தின் மீதான தாக்குதலுக்கான பொருள்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளதாகவும், டாங்கர்கள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட படை பிரிவுகள் மூலம் கீவ் நகரின் இர்பின் பகுதியை நோக்கி முன்னேறி வருவதாகவும் உக்ரைன் ராணுவத் தளபதி கூறியுள்ளார்.

ரஷ்ய ராணுவ கமாண்டர்கள் எரிபொருளை கப்பல் மூலம் தங்கள் படைகளுக்கு, பெலாரூஸிலிருந்து செர்னோபிள் விலக்கு மண்டலம் வழியாக அனுப்பி வருகின்றனர் என்றும் அவர் கூறினார். கிழக்கு நகரங்களான கார்ஹிவ், செர்னிஹிவ், சுமி மற்றும் தெற்கு நகரமான மைகோலாயிவ் ஆகிய பகுதிகளை ரஷ்ய ராணுவம் சுற்றிவளைப்பதில் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கெர்சன் உள்ளிட்ட சில நகரங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றியுள்ள நிலையில், ரஷ்ய படையினரால், கீவ், கார்கிவ் நகரங்களைக் கைப்பற்ற ஏவுகணை வீச்சு, வான்வெளித்தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. மத்திய, வடக்கு, தெற்கில் இருக்கும் நகரங்களில் இரவு நேரத்திலும் ரஷ்ய படைகள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றன. மேலும் 2 அணுமின் நிலையங்களும் ரஷ்யா வசம் சென்றுள்ளது. தலைநகர் கீவ்வில் இருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலை வில் ரஷ்ய படைகள் இருப்பதாக செயற்கை கோள் புகைப்படம் மூலம் தெரிய வந்துள்ளது. உக்ரைன் இராணுவப் தாக்குதலை நிறுத்திவிட்டு ஆயுதங்களை கீழே போடும் வரை தாக்குதலை நிறுத் தப் போவதில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைனின் மத்திய-மேற்கு பிராந்திய தலைநகரான வின்னிட்சி யாவின் விமான நிலையத்தை ரஷ்யா ஏவுகணை தாக்குதல் மூலம் முற்றிலு மாக அழித்துவிட்டதாக உக்ரைன் ஜனா திபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் அதிபரோடு தொலைபேசியில் உரையாடிய மோடி இந்தியர்களை மீட்க தொடர்ந்தும் ஆதரவைக் கோரினார்



உக்ரைன்– ரஷ்யா நாடுகளுக்கு இடையே போர் நடந்து வரும் நிலையில், இந்தியப் பிரதமர் மோடி இன்று இரண்டாவது முறையாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியோடு பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சு சுமார் 35 நிமிடங்கள் வரை நீடித்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சின்போது இரு நாட்டுத் தலைவர்களும் உக்ரைனில் நிலவி வரும் சூழ்நிலை குறித்து ஆலோசனை நடத்தியதாகவும், உக்ரைன் மற்றும் ரஷ்யா நாடுகளுக்கிடையே நேர உரையாடல் தொடர்வது குறித்த இந்தியப் பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்ததாகவும் தகவல் வெளி யாகியுள்ளது.

உக்ரைனில் இருந்து இந்தி யர்களை மீட்பதற்கு உதவிகரமாக இருந்ததற்கு உக்ரைன் அதி ருக்கு மோடி நன்றி தெரிவித்தா எனவும் சுமியில் இருந்து இந்தி யர்களை மீட்க உக்ரைன் அரசு தொடர்ந்து ஆதரவு அளிக்கவேண் டும் என அவரிடம் தெரிவித்தா எனத்தகவல் வெளியாகியுள்ளது

## ஜெயலலிதா மரணம் குறித்த விசாரணை டாக்டர்களிடம் இன்று மீண்டும் ஆரம்பம்



முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மரணம் குறித்து நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான விசாரணைக் கமின் விசாரணை நடத்தி வந்தது. ஜெயலலிதாவோடு தொடர்புடையவர்கள், மருத்துவ மனையில் அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் உள்ளிட்ட பலரிடம் பல்வேறு கட்ட விசாரணை நடந்துள்ளது.

2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆறுமுகசாமியின் விசாரணைக்கு சுப்ரீம் கோர்ட் தடை விதித்தது. அதன்பின்னர் மீண்டும் விசாரணை நடத்த கோர்ட் அனுமதி அளித்தது.

3 ஆண்டுகளுக்கு பிறகு நீதிபதி ஆறுமுகசாமி முன்னிலையில் இன்று மீண்டும் விசாரணை தொடங்கியது. விசாரணையில் பங்கேற்க அப்போலோ மருத்துவமனை டாக்டர்கள் 11 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டது.

அதன்பேரில் இன்று காலையில் 5 டாக்டர்கள் விசாரணைக்கு சமுகமளித்திருந்தனர். அவர்களிடம் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை நடத்தினார். நாளை 6 மருத்துவர்கள் விசாரணை செய்யப்படவுள்ளனர்.

டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை டாக்டர்களும் காணொலி மூலமாக இன்றைய விசாரணையில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேகதாதுவில் அணை கட்டுதலை கைவிடுக: மக்கள் நீதி மய்யத்தலைவர் கமல் கோரிக்கை

மேகதாதுவில் அணை கட்டும் முடிவை கர்நாடக அரசு கைவிட வேண்டும் என்று மக்கள் நீதி மய்ய கட்சியின் தலைவர் கமல்ஹாசன் கமல் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், காவிரியின் குறுக்கே மேகதாது அணையைக் கட்டினால், அது தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழித்து விடும் என்பதை அறிந்தும் குறுகிய கால அரசியல் ஆதாயத்திற்காக கர்நாடகாவில் ஆளும் பா.ஜ.க.வும், காங்கிரசும் இவ்விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளன.

இரு மாநில மக்களின் நல்லுறவை சீர்குலைக்கும் இந்தத் திட்டத்தை கர்நாடக அரசு கைவிட வேண்டும். மத்திய அரசும் இந்த விவகாரத்தில் தன் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும், என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



## தொண்டர்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிச்சயம் நிறைவேறுமென சசிகலா அறிக்கை



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்ற பதவிப்பெயரில் சசிகலா இன்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

திருச்செந்தூர் ஸ்ரீ முருகப்பெருமானையும், விஜயாபதி ஸ்ரீ விஸ்வாமித்திரரையும், இலஞ்சி ஸ்ரீ இலஞ்சிக்குமாரரையும் வழிபாடு செய்ய இரு தினங்களுக்கு முன்பாக தென் மாவட்டங்களுக்கு பயணம் சென்று வந்தது மிகவும் மனநிறைவையும், மகிழ்ச்சியையும் அளித்ததற்கு இறைவனுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மேற்கொண்டது ஆன்மீக பயணமாக இருந்தாலும், தென் மாவட்ட மக்கள் என்னை அன்போடு அரவணைத்து எனக்கு மிகப்பெரிய வரவேற்பை அளித்து எல்லையற்ற மகிழ்ச்சியை கொடுத்து என்னை திக்கு முக்காட செய்த அத்துனை நல்உள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், மதுரை ஆகிய தென் மாவட்டங்களில், சென்ற அனைத்து இடங்களிலும், கழகத் தொண்டர்களும், பொதுமக்களும் வழி நெடுகிலும், நீங்கள் அளித்த சிறப்பான வரவேற்பினாலும், கள்ளம் கபடமற்ற உங்களுடைய உண்மையான அன்பாலும் மனம் நெகிழ்ந்துபோனேன். அனைவரும் என்னை காண்பதற்காக வெகுநேரம் காத்தி ருந்த நிலையில், உங்களையெல் லாம் சந்தித்து வந்த பின்னர், விமான பயணத்தையும் மேற்கொள்ள இயலாமல், சாலை மார்க்கமாகவே பயணித்து சென்னை இல்லத்திற்கு வந்தடைந்தேன்.

நம் எம்.ஜி.ஆர் மற்றும் ஜெய லலிதாவையும் ஒவ்வொரு கழக தொண்டர்களின் கண்களில் என் னால் காண முடிந்தது. உங்களுடைய எதிர்பார்ப்புகளையும், ஏக்கங்க ளையும் அறிந்து கொள்ள முடிந்தது அனைத்துப் பகுதிகளில் உள்ள ஆண்கள் பெண்கள், முதியவர்கள், இளைஞர்கள் இளம்பெண்கள் என அனைவரும் ஒருசேர நம் இயக்கத்தை காப்பாற்றிடவேண்டும் என்ற முழக்கத்தை, எழுப்புகிறீர்கள்.

நீங்கள் அனைவரும் என் மீது வைத்துள்ள இந்த அசைக்க முடியாத நம்பிக்கை வீண் போகாத வகையில், உங்கள் அனைவருக் காகவும், தமிழக மக்களுக்காகவும் என் எஞ்சியுள்ள வாழ்நாட்களை அர்ப்பணித்து நிச்சயம் நிறைவேற்றுவேன்.

எத்தகைய சோதனைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் முறியடித்து, கழகத் தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையாக உறுதியோடு இருந்து எம்.ஜி.ஆர், ஜெய லலிதாவின் வழியில் கழகத்தை காப்போம் கவலை வேண்டாம். நம் இயக்கத்தை ஆரம்பித்த எம்.ஜி.ஆர், சிறப்பாக வழிநடத் திய ஜெயலலிதா ஆகிய இரு பெரும் தலைவர் களின் வழியில் அதே மக்களாட்சியை மீண்டும் அமைத்து மக்களால் நான், மக் களுக்காகவே நான் என்று தமிழக மக்களுக் காகவே வாழ்ந்த ஜெயலலிதாவின் தாரக மந்திரத்தை மனதில் வைத்து, தமிழக மக் களின் நலன் காப்பாற்றப்படும் என்று மனப் நிறைந்து சொல்கிறேன், இது உறுதி!, என்று சசிகலா தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## நாடகமாடும் ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். வேண்டாம் கட்சிக்கு சசிகலா தலைமையேற்க வேண்டும்



அ.தி.மு.க.வுக்கு சசிகலா தலைமை ஏற்கவேண்டும் என்று அ.தி.மு.க. வின் முன்னாள் செயலாளர் புகழேந்தி தெரிவித்திருக்கிறார்.

வத்தலக்குண்டுவில் எம்.ஜி.ஆர். புரட்சி சங்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்வில் அவர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார். அதன் பின்னர் ஊடகவியலாளர்களுடைய கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

ஜெயலலிதா மறைவிற்கு பிறகு அ.தி.மு.க.வுக்கு ஒற்றைத்தலைமை இல்லாததால் கட்சி தொடர் தோல்விகளை சந்தித்து வருகிறது. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆகிய இருவரும் கட்சியில் இருந்து விலகி அ.தி.மு.க. பொதுக்குழுவை கூட்ட வேண்டும். கட்சிக்கு சசிகலா தலைமையேற்க வேண்டும். இல்லையெனில் வேறு ஒருவரைக்கூட பொதுச் செயலாளராக பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைது செய்யப்பட்டபோது அ.தி.மு.க. தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதே போல ராஜேந்திர பாலாஜி கைது செய்யப்பட்டபோது ஏன் ஆர்ப்பாட்டம் நடத்தவில்லை? எடப்பாடி பழனிச்சாமியும், ஓ.பன்னீர்செல்வமும் நாடகமாடி வருகின்றனர், என்று புகழேந்தி குற்றச்சாட்டுகளை முன் வைத்தார்.

# கல்முனை வைத்தியசாலை புதிய காணியில் பூமிபூஜை

## சேவையாளர்களுக்கும் கௌரவம்





(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கென கல்முனை வாடி வீட்டு வீதியில் கிடைக்கப்பெற்ற காணியில் புதிய கட்டடம் அமைப்பதற்கான பூமி பூசை நேற்று இடம்பெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரனின் தலைமையில் இப் பூமிபூஜை இடம்பெற்றது.

குறித்த காணியை வைத்தியசாலைக்கு பெற்றுக்கொடுப்பதற்கு உதவி செய்த வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர்களான டாக்டர் சாமித்தம்பி இராஜேந்திரன், டாக்டர் நடராஜா ரமேஷ், கல்முனை மாநகரசபை உறுப்பினரும் சமூகச் செயற்பாட்டாளருமான சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கூடவே இந்த நிகழ்வில் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டனர். மற்றும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், வைத்தியசாலையின் நலன்விரும்பிகள், வைத்தியசாலை முன்னாள், இந்நாள் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பல தடைகளைத் தாண்டி இந்த காணி வைத்தியசாலைக்கு கிடைக்க தொடர்ந்து பாடுபட்ட அனைவருக்கும் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் நன்றிகளை தெரிவித்தார்.



# திருமலை தேசிய சேமிப்பு வங்கி மகளிர் தின விசேட நிகழ்வுகள்

மகளிர் தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கி திருகோணமலை கிளையின் ஏற்பாட்டில் விசேட நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை திருகோணமலை கண்டி வீதியில் அமைந்துள்ள சிலிங்கோ நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

தேசிய சேமிப்பு வங்கி திருகோணமலை கிளை உதவி முகாமையாளர் திருமதி நிரோஷினி ரமேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை பொது வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மருத்துவர் கிரியெல்ல, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுவர்ணா தீபாணி, திருகோணமலை பொலிஸ் தலைமையக பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஜி.குணவர்த்தன, வங்கியின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் சி.சிவசொருபன், கந்தளாய் கிளை முகாமையாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வங்கி வாடிக்கையாளர்களின் அனுபவம் பகிரப்பட்டதுடன் அரங்க ஆற்றுகையும் நிகழ்த்தப்பட்டது.

ஷெரின் சித்திரா என்ற வாடிக்கையாளருக்கு ரூ. 3 மில்லியனுக்கான தனிநபர் கடனுக்கான காசோலை வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பெண் வாடிக்கையாளர்களுக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.



# மருதமுனையில் காஸ் அடுப்பு திடீரென வெடித்துச் சிதறியது

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் காஸ் அடுப்பொன்று வெடித்துச் சிதறியுள்ளது.

மருதமுனை – பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இமாம் கஸ்ஸாலி வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் சமையல் பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போதே, காஸ் அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

எனினும், சமையலில் ஈடுபட்டிருந்தவருக்கோ அல்லது வேறு எவருக்குமோ எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்டூர் ஆத்மஞான பீடத்தில் உலக சேமத்திற்கு மகாயாகம்

(காரைதீவு நிருபர் சகா)

உலக சேமத்திற்கான மகாயாகமும் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் தெய்வீகதிருப்பாதங்களுக்கு அபிசேக ஆராதனையும் மண்டூர் பாலமுனை ஸ்ரீ ஆத்மஞான பீடத்தில் அண்மையில் நடைபெற்றன. ஆன்மீக ஜெகத்குருமகாயோகி புண்ணியரெத்தினம் சுவாமிகள் ஆஸ்தான குருவாக வந்து இதனை நிகழ்த்தி வைத்தார்.

அத்துடன், மகாலிங்க வடிவான ஈசனுக்கு அபிசேக ஆராதனைகளும் இடம்பெற்றன.

நாதஸ்வர மேள தாளங்கள் சகிதம் மிகவும் பக்திபூர்வமாக விடியவிடிய இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டு மகாயோகியின் பாதங்களுக்கு பாதநமஸ்காரம் செய்தனர்.

அனைத்து பக்தர்களுக்கும் ஆத்மஞானபீட காவிநிற வஸ்திரம் வழங்கப்பட்டு தமிழில் ஆராதனை நிகழ்த்தப்பட்டது.

# கொரோனாவால் மரணித்தவர்களின் நல்லடக்கம் ஓட்டமாவடியில் நிறைவு

## ஓராண்டில் 3,634 உடல்கள் நல்லடக்கம்

கொரோனா தொற்றினால் மரணித்த நபர்களை நல்லடக்கம் செய்து வந்த ஓட்டமாவடி – மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளன என ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் மரணிக்கும் நபர்களை மார்ச் 5 முதல் எந்தவொரு மையவாடிகளிலும் அடக்கம் செய்யலாம் எனும் சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின் படி, ஓட்டமாவடி மஜ்மா நகரில் மேற்கொள்ளப்பட்டு வந்த நல்லடக்கப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளன.

ஓட்டமாவடி – மஜ்மா நகர் மையவாடியில் 2021 மார்ச் 5 முதல் 2022 மார்ச் 5 வரையான ஒரு வருடத்தில் 3,634 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. அதில், அனைத்து இனங்களைச் சேர்ந்தவர்களின் உடல்களும் அடங்குகின்றன.

ஜனாஸா நல்லடக்கப் பணியை எமது பிரதேச சபை மேற்கொள்வதற்கு இதுவரை காலமும் சகல விதங்களிலும் ஒத்துழைப்புக்களை வழங்கிய அரசாங்கத்திற்கு நன்றிகளை தெரிவிக்கிறேன் என்று தவிசாளர் தெரிவித்தார்.

# ஆறு ஒட்சிசன் பிறப்பாக்கி இயந்திரங்கள் காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு!

## மொத்தம் இருபது லட்சம் ரூபா பெறுமதியானவை

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இருபது லட்சம் ரூபா பெறுமதியான 06 ஒட்சிசன் பிறப்பாக்கி இயந்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் 5 ஆம் திகதி மாலை 7.30 மணியளவில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்த இயந்திரங்களை காத்தான்குடி பத்ரிய்யாஹ் ஜும்ஆப் பள்ளிவாயலின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபிர் அவர்களிடம் கையளித்திருந்தனர்.

இந்நிகழ்வு வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபிர் தலைமையில் இடம்பெற்றது. பத்ரிய்யாஹ் ஜும்ஆ பள்ளிவாயல் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், தாதி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# “எத்தனை சவால்கள் வந்தாலும் சந்திக்க நான் தயார்”

## Sanlin Beauty Parlour அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் சஞ்சீவன் லிந்துஜாவின் நேர்காணலிது.



**உங்களைப் பற்றிய அறிமுகம்**

எனது பெயர் சஞ்ஜீவன் லிந்துஜா. எனக்கு சொந்த ஊர் சாவகச்சேரி. நான் மிகவும் விரும்பி செய்யும் தொழில் இந்த அழகுக் கலைத்துறையாகும். ஆரம்பத்திலிருந்தே அழகுக்கலைத் துறை யென்பது என் மனதிற்குள் ஆழமாக பதிந்ததொன்று. இத் துறையில் நான் கொண்டிருந்த முழுமையான ஈடுபாடு என்னை தனியொரு சுயதொழிலை ஆரம்பிக்க உதவியாக இருந்தது. Sanlin Beauty Parlour என்ற நாமத்தில் எனது சொந்த அழகுக்கலை நிறுவனத்தை நடாத்தி வருகிறேன்.



சஞ்ஜீவன் லிந்துஜா
உரிமையாளர்
Sanlin Beauty Parlour அழகுக்கலை நிறுவனம்

**அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?**

சிறுவயதிலிருந்தே அழகுக் கலைத்துறையில் எனக்கு ஈடுபாடு அதிகம். அழகுக்கலை சார்ந்த நுணுக்கமான விடயங்களை எல்லாம் இலகுவாக என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. எனக்குள் இயல்பாகவே மற்றவர்களை அழகாக ஒப்பணை செய்யும் திறமையிருக்கிறது என்பதை நானே கண்டறிந்து கொண்டேன். எனக்கிருக்கும் அழகுக்கலைத் திறமைகளை ஒவ்வொன்றாக நான் அறிந்து கொண்டதன் பின்னரே இத்துறையையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற ஒரு எண்ணம் எனக்குள் தோன்றியது. அழகுக்கலைத் துறையில் ஆர்வமும் அதிகரித்தது. அதன் பின்பு அழகுக்கலையில் முழுநேரமும் என்னை ஈடுபடுத்திக்கொண்டேன். ஆரம்பித்திலிருந்து இன்றுவரை அழகுக்கலை மேல் நான் கொண்ட அதீத ஆர்வமும், முயற்சியும் தான் என் ஊரில் ஒரு அழகுக்கலை நிலையமொன்று ஆரம்பிக்கப்பட காரணமாகியது.

**இத்துறையில் நீங்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்ன?**

அடுத்தவர்கள் கூறுவதைப் பற்றி எண்ணி நம்மை நாமே தாழ்த்துவதுண்டு. அப்படி யென்றால் அதைக்கேட்டு நம்முடைய ஆர்வங்களையும், முயற்சிகளையும் முடக்கி போட்டுவிடக்கூடாது. நாம் எதை சாதிக்க நினைக்கின்றோமோ அதை சாதிக்க களமிறங்கவேண்டும். அப்படி நம் வெற்றியை முடக்கிப்போடும் இவற்றை கடந்து செல்வது பெரிய சவால் தான். நம்முடைய வாழ்க்கையில் நாம் எத்தனையோ மனிதர்களை சந்திக்கின்றோம். ஒவ்வொரு மனிதருக்குள்ளும் வேறுபட்ட எண்ணங்கள் இருக்கும். அதிலும் குறிப்பாக என்னிடம் வரும் வாடிக்கையாளர்களின் ரசணைகள் ஆளுக்காள் மாறுபடும். அப்படி வாடிக்கையாளர்களின் ரசணையை அறிந்து அவர்களுக்கேற்றவாறு மெருகேற்றி ஒப்பணை செய்வதும் ஒரு சவாலாகத்தான் இருக்கிறது. எனது வாழ்வில் எத்தனை சவால்கள் வந்தாலுமே சந்திக்க நான் தயாராகவே இருக்கின்றேன். இடர்களை எல்லாம் தகர்த்து முன்னே செல்வது தான் முக்கியம் என்று நான் கருதுகின்றேன்.



**அழகுக்கலைத் துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..**

அழகுக்கலைத்துறையில் அழகுக் கலை நிபுணர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் குறைவென்றே கூற வேண்டும். இந்த சமூகத்தில் எங்களுடைய திறமைக்கு கிடைக்கும் வாய்ப்புகளையும் அங்கீகாரத்தையும் ஏற்படுத்த வேண்டியது நாம் தான். அப்படி நான் வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ள முதலில் என்னை நம்பி வரும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த திருப்திகரமான சேவையை வழங்குகின்றேன். எனது திருப்திகரமான சேவையில் மகிழ்ச்சிகொண்ட எனது வாடிக்கையாளர்கள் எனக்கு புது புது ஓர்டர்களை பெற்றுத் தருகின்றனர். இதை நான் ஒரு வாய்ப்பாகவே கருதுகின்றேன். எனக்கான வாய்ப்புகள் குறைவென்றாலும் கிடைக்கும் சிறு வாய்ப்பையும் நான் தவறியதில்லை. சாதனைகள் என்று கூறவேண்டுமென்றால் சுயமாக ஒரு தொழிலை நான் முன்னெடுத்து செய்வதேயொரு சாதனைதான். எனக்கான வாய்ப்புகளை உருவாக்க நானே முயற்சி செய்து அப்படி உருவாக்கிய வாய்ப்புகளை சாதனைகளாக மாற்ற நான் முழுமையாக ஈடுபட்டுவருகிறேன்.

**சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.**

என்னைப் போன்று சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் பல பெண்களுக்கு இருக்கும். இருந்தாலும் சாதிக்க வேண்டுமென்று வீட்டை விட்டு வெளியுலகிற்கு வரும் பெண்கள் குறைவுதான். வீட்டுக்குள்ளேயே அவர்களின் முகங்களை மறைத்து திறமைகளை மூட்டை கட்டி வைத்துவிடுகின்றனர். பெண்களாகிய நாம் ஒவ்வொருவரும் திறமைசாலிகள். பலசாலிகள். எந்த தடையாக இருந்தாலும் அவற்றை கடந்து பயணிக்க வேண்டும். எம்மால் முடியாததென்று எதுவுமே இல்லை. கடினமான பாதை யாக இருந்தாலும் இலகுவாக எண்ணி விடா முயற்சியோடு முன்னேறிச் செல்ல வேண்டும். நம்மை இழிவாக பேசும் சமூகத்திற்கு முன்னே எம்மாலும் முடியுமென்று சாதித்துகாட்டவேண்டும்.






# இலங்கையை இன்னிங்சால் வென்ற இந்தியா சகலதுறை ஆட்டத்தில் ஜடேஜா கலக்கல்!

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் தொடரில் இந்திய கிரிக்கெட் அணி இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது. இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிவரும் இலங்கை கிரிக்கெட் அணி, 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி பஞ்சாப் மாநிலம் மொகாலியில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, தனது முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 574 ஓட்டங்களை எடுத்து நிறைவுசெய்தது. ரவீந்திர ஜடேஜா 175 ஓட்டங்களைக் குவிக்க, ரிப் பண்ட் 96 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

பின்னா தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. ஜடேஜா 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து 390 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் மீண்டும் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சையும் தொடர்ந்து விளையாடியது. நிரோஷன் டிக்வெல்ல 51 ஓட்டங்களைச் சேர்த்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருக்க மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இலங்கை அணி இறுதியில் 178 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன் மூலம் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது. ஜடேஜாவும் அஸ்வினும் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் நாயகனாக ஜடேஜா தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான தொடரின் இரண்டாவதும் இறுதியுமான போட்டி வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



## கபில்தேவின் சாதனையை முறியடித்த அஸ்வின் இந்திய டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய மைல்கல்

டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் கபில்தேவை முந்திய ரவிச்சந்திரன் அஸ்வின் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளார். இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அஸ்வின் இந்த மைல்கல்லை எட்டியிருக்கிறார்.

கபில்தேவ் 434 விக்கெட்டுக்கள் வீழ்த்தியிருந்த நிலையில் அஸ்வின் அந்த எண்ணிக்கையை 435 விக்கெட்டுகளை எடுத்துக் கடந்துள்ளார். இந்தப் பட்டியலில் அணில் கும்ப்ளே 619 விக்கெட்டுக்களுடன் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் – ஆஸ்திரேலியா டெஸ்ட் மழையால் தாமதமாக ஆரம்பமானது



ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ராவல்பிண்டியில் நடந்து வருகிறது. இதில் முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 476 ஓட்டங்களைச் சேர்த்து இன்னிங்சை நிறைவு செய்துகொண்டது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி இரண்டாவது நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 5 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நேற்று 3 ஆவது நாள் ஆட்டத்தில் தொடர்ந்து விளையாடிய ஆஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களை எடுத்திருந்தபோது போதிய வெளிச்சமின்மை மற்றும் மழை காரணமாக ஆட்டம் முன்கூட்டியே முடித்துக் கொள்ளப்பட்டது.

டேவிட் வோனர் 68, உஸ்மான் க்வாஜா 97 ஓட்டங்களோடு ஆட்டமிழந்திருந்தனர். லபுசேன் 69, ஸ்டீவன் ஸ்மித் 24 ஓட்டங்களோடு களத்தில் இருந்தனர். இன்று நான்காவது நாள் ஆட்டம் அதிகாலையில் பெய்த மழையின் காரணமாக தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. 3 மணித்தியால காலதாமதத்திற்கு பின்னரே இன்றைய நாள் ஆட்டம் தொடங்கியிருந்தது.

## ஐ.பி.எல். 2022 தொடர் அட்டவணை வெளியானது முதல் போட்டியில் சென்னை - கொல்கத்தா மோதல்

இந்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். லீக் போட்டிகளுக்கான அட்டவணையை பி.சி.சி.ஐ. நிர்வாகம் இன்று வெளியிட்டுள்ளது.

மார்ச் 26 ஆம் திகதி தொடங்கும் முதல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியை வன்கடே மைதானத்தில் எதிர்கொள்கிறது. மறுநாள், டெல்லியை அணியை மும்பை அணி எதிர்கொள்ளவுள்ளது. தொடரின் இறுதிப்போட்டி மே 29 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 10 அணிகளும் தலா 14 லீக் போட்டிகளில் விளையாடவுள்ளன. கடந்த தொடரின் அடிப்படையில், ஒவ்வொரு அணியும் ஐந்து அணிகளுடன் இரண்டு முறையும், மீதமுள்ள நான்கு அணிகளுடன் ஒரு முறையும் விளையாடப்போகின்றன.

மும்பையின் வன்கடே மற்றும் டி.வை. பாட்டீல் மைதானங்களில் அனைத்து அணிகளும் தலா நான்கு போட்டிகளிலும், மும்பையின் பிரபோர்ன் ஆடுகளம், (சி.சி.ஐ.), புனே மற்றும் எம்.சி.ஏ. சர்வதேச மைதானங்களில் தலா மூன்று போட்டிகளிலும் விளையாடவுள்ளன.

பிளேஓஃப் சுற்றுக்கான மைதானங்கள் பின்னர் முடிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாபெரும் போராட்டத்துக்கு மகளிர் தினத்தில் அழைப்பு!

## முல்லை மாவட்ட காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் விடுப்பு



சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் யுத்தம் முடிந்து இன்று வரை தங்களுடைய உறவுகளைத் தேடி தொடர் கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் யுத்தம் நிறைவடைந்து தங்களுடைய உறவுகளைக் கையளித்த உறவுகள் யுத்த காலப்பகுதியில் காணாமல் போன உறவுகள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் என பலதரப்பட்ட வகைகளிலும் கடத்தப்பட்டும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளைத் தேடி 2009 மே மாதம் 18 ஆம் திகதி யுத்தம் நிறைவடைந்த காலம் முதல் தேடிப் போராடி வருகின்றனர். இவ்வாறு போராட்டங்களை ஆரம்பித்து தமக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் தொடர் கவன வீர்ப்புப்போராட்டங்களைஆரம்பித்தனர். அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 2017 மார்ச் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாகக் கொட்டகை அமைத்து தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்த உறவுகள் இன்று வரை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் வருகிற மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தில் ஐந்து ஆண்டுகள் தொடர் போராட்டத்தை நிறைவு செய்து ஆறாவது ஆண்டாக இந்தப் போராட்டம் தொடர்கின்ற நிலையில் கூட இன்று வரை தங்க ளுக்கான எந்தவிதமான தீர்வுகளும் கிடைக்கவில்லை என்று தெரிவித்து மார்ச் 8 ஆம் திகதி நாளை (செவ்வாய்க் கிழமை) மகளிர் தினத்தை புறக்கணித்து மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலே இடம்பெற இருக்கின்ற இந்த மாபெரும் கவன வீர்ப்புப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாத்திரமன்றி மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், வர்த்தகசங்கங்கள், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சிவில் அமைப்புக்கள், சமூக நலன் விரும்பிகள் என அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து தங்களுடைய உறவுகளை மீட்பதற்கான இந்தப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத் தலைவி மரிய சுரேஷ் ஈஸ்வரி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வு இடம்பெற்றுவருகின்ற இந்தவேளையில் ஐக்கிய நாடுகள் சபையிடமே தங்களுடைய தீர்வுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில் இந்த சபை அமர்வுகள் இடம்பெறும் காலப்பகுதியில் இடம்பெறுகின்ற இந்தப் போராட்டத்தில் அனைத்து தரப்பினரும் இணைந்து கொண்டு தங்களுடைய கோரிக்கைக்கு வலுச்சேர்த்து எங்களுடைய உறவுகள் எங்களிடம் கிடைப்பதற்கு வழிவகை செய்யுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 13 ஆம் திருத்தம் நடைமுறையானால் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்குமா?



சாள்ஸ் எம்.பி. கேள்வி

13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டால் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக் கும் என்றால் 1987 ஆம் ஆண்டே தமிழர்களுக்குத் தீர்வு கிடைத்திருக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

13 ஆவது திருத்தச் சட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருப்பது. தமிழர்களினுடைய தீர்வின் இலக்கு என்பது வேறு. தமிழர்கள் கௌரவமாக வாழக் கூடிய வகையில் அரசமைப்பில் மாற்றம் கொண்டு வந்தால் மட்டும் தான் தமிழர்களுடைய இனப்பிரச்சனைக்குத் தீர்வாக இருக்கும். நான் இந்தியத் தூதுவர்களைச் சந்தித்த போது கூட 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்திருந்தேன். 13 ஆவது திருத்தச் சட்டத்தில் எந்தவிதமான காணி அதிகாரங்களும் இல்லை. குறிப்பாக, வடமாகாணத்தில் மட் டும் 44 வீதமான நிலங்கள் வன திணைக்களத்திடம் இருக்கின்றன.

வன திணைக்களத்திடம் மாத்திரம் 44 வீதமான நிலங்கள் இருக்கின்ற போதும் மகாவலி, வன ஜீவராசி திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் போன்றன தன்னிச்சையாக நிலங்களை வர்த்தகமானியூடாகக் கையகப் படுத்தும் அதிகாரம் இருக்கும் போது 13 ஆவது திருத்தச் சட்டம் மூலம் அதனைத் தடுக்க முடியாது. அதில் காணி அதிகாரம் இல்லை.

எப்படி 13 ஆவது திருத்த சட்டம் தமிழர்களுக்குத் தீர்வாக அமையும். 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்றால் 1987 ஆண்டே தமிழர்களுக்குத் தீர்வு கிடைத்திருக்கும். 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையான தீர்வாக அமையாது என்பது எனது கருத்து எனத் தெரிவித்தார்.

## தடைசெய்யப்பட்ட 600 பொருள்களுக்கான இறக்குமதித் தடை தொடர்பான அறிவிப்பு

அத்தியாவசியமற்ற பொருள்கள் அடங்கிய பட்டியல் இன்று அமைச்சரவைக்கு வழங்கப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட் டிகல தெரிவித்தார்.

இதற்கு அமைச்சரவை பரிந்துரை கிடைத்தவுடன் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடிக்குத் தீர்வாக 600 அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. மேற்படி பொருள்களுக்கான வரியை அதிகரிக்குமாறு மத்திய வங்கி பரிந்துரைத்த நிலையில் 600 அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியை நிறுத்த நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நுகர்வோர் பொருள்களின் இறக்குமதிக்கான செலவு 2020 இல் 3401.66 மில்லியன் டொலரில் இருந்து 2021 இல் 3848.71 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவின் கடன் வசதியின்கீழ் இலங்கைக்கு டீசல், பெற்றோல்!

இந்திய வழங்கும் கடன் வசதியின் கீழ் எதிர் வரும் மார்ச் 15 ஆம் திகதி நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் என எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

இலங்கைக்கு கச்சா எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்காக உத்தரவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவுள்ளதாகக் கூறினார்.

அத்தோடு, எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் முழு கொள்ளளவில் இயங்கி வருவதாகவும் அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

மேலும், சுத்திகரிப்பு நோக்கங்களுக்காக நிலையங்களில் 2 லட்சத்து 8 ஆயிரம் மெற்றிக் தொன் கச்சா எண்ணெய் இருப்பை வைத்திருக்க முடியும் என அமைச்சர் கூறினார்.

இதனை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கவனித்து வருவதாகவும், நுகர்வோர் மற்றும் மின்சார சபைக்கு எரிபொருள் வழங்குவதில் சிக்கல் இருக்காது என்றும் அவர் உறுதியளித்தார்.

சொர்க்கம் திருமண சேவை
இல.102/ A , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.




| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 24.01.1990 மதம் - இந்து ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூராடம் கி.பா - செவ் - தகைமை - A/Level தொழில் - Canada Technician எதிர்பார்ப்பு - யாழ்ப்பாணத்து மணமகள் | பிறந்த திகதி - 05.03.1994 மதம் - இந்து ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை கி.பா - செவ் - 2ல் சூரி செவ் தகைமை - Diploma in Medical Administration தொழில் - Canada Team Leader எதிர்பார்ப்பு - உள்ளூர் உத்தியோக மணமகன் |
| பிறந்த திகதி - 30.01.1989 மதம் - இந்து ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சுவாதி கி.பா - செவ் - தகைமை - B.Com (Hons) தொழில் - Canada எதிர்பார்ப்பு - உள்ளூர் அழகிய மணமகள் | பிறந்த திகதி - 30.11.1995 மதம் - இந்து ஜாதி - P நட்சத்திரம் - பூரட்டாதி செவ் - 7இல் சூரி செவ் தகைமை - BFA தொழில் - எதிர்பார்ப்பு - அரச தனியார் மணமகன் |
| பிறந்த திகதி - 16.06.1991 மதம் - இந்து ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம் கி.பா - செவ் - லக்கினத்தில் செவ் தகைமை -HND QS SLIATE தொழில் - quantity surveyor எதிர்பார்ப்பு - உள்ளூர் உத்தியோக மணமகள் | பிறந்த திகதி - 13.12.1993 மதம் - இந்து ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை செவ் - 12 இல் தகைமை - LLB தொழில் - Lawyer Assistant எதிர்பார்ப்பு - உள்ளூர் உத்தியோக மணமகன் |
| பிறந்த திகதி - 02.08.1990 மதம் - இந்து ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை செவ் - 7 இல் தகைமை - Bsc, Qs Master Degree தொழில் - quantity surveyor எதிர்பார்ப்பு - உள்ளூர் உத்தியோக மணமகள் | பிறந்த திகதி - 06.01.1990 மதம் - இந்து ஜாதி - V பெண் நட்சத்திரம் - அச்சுவினி செவ் - லக்கினத்தில் தகைமை - BA (Hons-Spl) தொழில் - Operation எதிர்பார்ப்பு - உள்ளூர் படித்த மணமகன் |

077 650 5097, 077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா - 0014166661855

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.03.2022இல் வெளியிடப்பெற்றது.